பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
02 07 2025 **WEDNESDAY** 7 15 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு, கானாவின் உயரிய விருது வழங்கப்படும் என்று அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

2. போதைப்பொருள் புழக்கம் முற்றிலும் ஒடுக்கப்பட வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

3. டிஜிட்டல் இந்தியா இயக்கம், உலக நாடுகளின் நம்பிக்கையை பெற்றுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

4. சர்வதேச அணுசக்தி முகமையுடனான ஒத்துழைப்பை ரத்து செய்ய வகைசெய்யும் மசோதாவிற்கு ஈரான் அதிபர் திரு. **Mosoud Pezeshkian** ஒப்புதல் அளித்துள்ளார்.

5. ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து தகுதிச்சுற்று போட்டியில் இந்தியா 5-0 என்ற கோல்கணக்கில் ஈராக்கை வென்றது.

**>>>>>><<<<<<**

பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு, கானாவின் உயரிய விருது வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசுமுறைப் பயணமாக திரு. நரேந்திர மோடி கானா புறப்பட்டுச் சென்றுள்ள நிலையில் இந்த அறிவிப்பினை அந்நாட்டு அரசு வெளியிட்டுள்ளது.

**>>>>>><<<<<<**

போதைப்பொருள் புழக்கம் முற்றிலும் ஒடுக்கப்பட வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட 8 பேர் கைது செய்யப்பட்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பாராட்டு தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

போதைப்பொருள் கடத்தலை தடுப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடரும் என்றும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

**>>>>>><<<<<<**

மக்களின் நம்பிக்கையை பெற்ற கட்சியாக பிஜேபி திகழ்வதாக அக்கடசியின் மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இன்று பாட்னாவில் நடைபெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

மத்திய அரசு கடந்த 11 ஆண்டுகளாக செயல்படுத்திய திட்டங்கள் காரணமாக மக்களின் வாழ்க்கைத் தரம் மேற்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து கட்சியினர் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அரசியல் சாசனம் குறித்து காங்கிரஸ் மற்றும் ராஷ்ட்ரிய ஜனதா தள் கட்சிகள் தவறான தகவல்களை பரப்பி வருவதாக அவர் குற்றம் சாட்டினார்.

இவ்விரு கட்சிகளும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் ஷெட்யூல்டு வகுப்பினருக்கு எதிராக செயல்படுவதாகவும் திரு. ராஜ்நாத் சிங் குறை கூறினார்.

**>>>>>><<<<<<**

**Bandikui Spur** நான்கு வழி பசுமை வழித்தட பணிகள் நிறைவடைந்துள்ளதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், 2 ஆயிரத்து 16 கோடி ரூபாய் செலவில் இப்பணிகள் நிறைவேற்றப்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக, தில்லி – ஜெய்ப்பூர் இடையேயான பயண நேரம் 45 நிமிடம் குறையும் என்றும் அவர் கூறியுள்ளார்.

சம்பந்தப்பட்ட பகுதிகளில் போக்குவரத்து நெரிசலை குறைக்கவும் இந்த வழித்தடம் உதவிடும் என்று திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

**>>>>>><<<<<<**

டிஜிட்டல் இந்தியா இயக்கம், உலக நாடுகளின் நம்பிக்கையை பெற்றுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், 5ஜி அலைக்கற்றை சேவைகளை விரைவாக செயல்படுத்திய நாடாக இந்தியா திகழ்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

குறைந்த கட்டணத்தில் இணையதள சேவை, எளிதான டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை போன்றவை டிஜிட்டல் இந்தியா இயக்கத்தின் வெற்றியில் அடங்கும் என்று திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

**>>>>>><<<<<<**

புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் வேலைவாய்ப்புடன் கூடிய ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த திட்டத்தின் கீழ் அடுத்த இரண்டாண்டுகளில் மூன்றரை கோடி வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றார்.

இந்த திட்டத்தின் கீழ், பணியமர்த்தப்படும் இளையோருக்கு வருடத்திற்கு இரண்டு முறை 7 ஆயிரத்து 500 ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கப்படும் என்றும் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

**>>>>>><<<<<<**

அஸ்ஸாம் முதலமைச்சர் திரு. ஹிமந்த பிஸ்வா சர்மா, இன்று மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரியை இன்று புதுதில்லியில் சந்தித்து பேசினார்.

அஸ்ஸாமின் சாலை மேம்பாட்டுப் பணிகள் குறித்து இந்த சந்திப்பின் போது விவாதிக்கப்பட்டதாக திரு. ஹிமந்த பிஸ்வா சர்மா தெரிவித்தார்.

சாலை மேம்பாட்டுத் திட்டங்களை குறித்த காலத்திற்குள் நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு அளிக்குமாறு திரு. ஹிமந்த பிஸ்வா சர்மா இந்த சந்திப்பின் போது வலியுறுத்தினார்.

**>>>>>><<<<<<**

நிலக்கரி உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

குறிப்பாக, வணிக ரீதியிலான நிலக்கரி சுரங்கங்களின் உற்பத்தி, நடப்பு நிதியாண்டில் இதுவரை 16 புள்ளி நான்கு சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**>>>>>><<<<<<**

பத்ம விருதுகளுக்கு வரும் 31ஆம் தேதிவரை விண்ணப்பிக்கலாம் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

இதற்கான பரிந்துரைகளை தேசிய விருது இணையதளத்தில் மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**>>>>>><<<<<<**

சர்வதேச அணுசக்தி முகமையுடனான ஒத்துழைப்பை ரத்து செய்ய வகைசெய்யும் மசோதாவிற்கு ஈரான் அதிபர் திரு. **Mosoud Pezeshkian** ஒப்புதல் அளித்துள்ளார்.

இதன்மூலம் இந்த சட்டம் செயல்பாட்டுக்கு வந்துள்ளதாக ஈரான் அரசு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவுடனான மோதலுக்குப் பிறகு ஈரான் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இந்த மசோதாவிற்கு ஈரான் நாடாளுமன்றம் அண்மையில் ஒப்புதல் அளித்தது.

**>>>>>><<<<<<**

தெலங்கானாவில் மருந்து உற்பத்தி தொழிற்சாலை ஒன்றில் நேரிட்ட தீ விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா 1 கோடி ரூபாய் வழங்கப்படும் என்று சம்பந்தப்பட்ட நிறுவனம் அறிவித்துள்ளது.

**Sangariddi** மாவட்டத்திற்கு உட்பட்ட **Pashamylaram** -ல் செயல்பட்டு வந்த தொழிற்சாலையில் நேரிட்ட தீ விபத்தில் 40 பேர் உயிரிழந்தனர், 33 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களுக்கான சிகிச்சை செலவுகள் முழுவதும் ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அடுத்த 90 நாட்களுக்கு சம்பந்தப்பட்ட பிரிவு செயல்படாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>>><<<<<<**

ஒடிசாவில் பூரி ரத யாத்திரையின் போது நேரிட்ட கூட்ட நெரிசலில் சிக்கி, 3 பேர் உயிரிழந்த சம்பவம் குறித்து விசாரிப்பதற்காக கூடுதலாக நான்கு பேரை கொண்ட குழுக்களை அம்மாநில அரசு ஏற்படுத்தியுள்ளது.

இந்தக் குழு, 30 நாட்களுக்குள் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**>>>>>><<<<<<**

உத்தரபிரதேசத்தில் சட்டவிரோதமாக செயல்படும் கனிமச் சுரங்கங்கள் மீது நடவடிக்கை எடுக்க நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுவதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மற்றும் ட்ரோன்கள் பயன்படுத்தப்படுவதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன் காரணமாக, சட்டவிரோதமாக கனிமங்களை கொண்டு சென்ற 21 ஆயிரத்துக்கு மேற்பட்ட வாகனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் செயல்படும் 57 சோதனைச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>>><<<<<<**

ஜம்மு காஷ்மீரில் அமர்நாத் யாத்திரைக்கென அதிநவீன ஒலிபரப்புக் கூடத்தை ஆகாஷ்வாணி ஏற்படுத்தியுள்ளது.

அமர்நாத் யாத்ரிகர்களுக்கு தேவையான தகவல்களை வழங்குவதற்கென இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

ஸ்ரீநகர் ஆகாஷ்வாணியின் பொறியியல் பிரிவு துணைத் தலைமை இயக்குநர் திரு. குர்பீந்தர் சிங் இதனை தொடங்கி வைத்தார்.

**>>>>>><<<<<<**

மத்தியப்பிரதேசம் மற்றும் சத்திஷ்கடுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த ஐந்து தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

பீகார், மேற்குவங்கம், சிக்கிம், ஜார்க்கண்ட், ஒடிசா ஆகிய மாநிலங்களில் அடுத்த 3 தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹிமாச்சலப்பிரதேசம், உத்ராகண்ட், உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளிலும் வரும் 10ஆம் தேதிவரை மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மஹாராஷ்ட்ரா மற்றும் கோவாவிலும் அடுத்த 7 நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

**>>>>>><<<<<<**

ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து தகுதிச்சுற்று போட்டியில் இந்தியா 5-0 என்ற கோல்கணக்கில் ஈராக்கை வென்றது.

தாய்லாந்தில் நடைபெற்று வரும் இப்போட்டியின் இன்றைய ஆட்டத்தில் **Sangeetha, Manisha, Karthika, Nirmala** மற்றும் **Rathan Bala** தலா ஒரு கோல் போட்டனர்.

**>>>>>><<<<<<**

மலேசிய ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Dhyan Santosh – Disha Santosh** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

19 வயதுக்குட்பட்டோருக்கான கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 22-20, 25-23 என்ற செட்கணக்கில் அஜர்பைஜானின் **Ulvi Huseynov – Leyla Jamalzade** இணையை வென்றது.

மகளிர் ஒற்றையர் பிரிவில் **Disha Santosh 2**1-16, 21-9 என்ற செட்கணக்கில் மலேசியாவின் **Weng Yan Lee-**யை வென்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறினார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Tankara Gnana Dattu Talasila-** வும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார்.

**>>>>>><<<<<<**

இந்தியா - இங்கிலாந்து இடையேயான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்கியது.

பர்மிங்காமில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற இங்கிலாந்து முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதனையடுத்து பேட் செய்து வரும் இந்தியா சற்றுமுன்வரை 2 விக்கெட் இழப்புக்கு 143 ரன் எடுத்துள்ளது

**>>>>>><<<<<<**

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் இந்தியாவின் ரிஷப் பண்ட் ஆறாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

**>>>>>><<<<<<**

நார்தாம்டனில் நடைபெற்று வரும் இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது இளையோர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பேட் செய்து வரும் இங்கிலாந்து சற்றுமுன்வரை 28 புள்ளி நான்கு ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 170 ரன் எடுத்துள்ளது.

**>>>>>><<<<<<**

கனடா ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Ira Sharma** பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**>>>>>>END<<<<<<**